இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2024. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 01 | திகதி : 21.01.2024 | விலை : 50.00

# நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்ததான பணிகளுக்கு முன்னுரிமை



## வடக்கு – கிழக்கு ஆயர் மன்றத்தில் தீர்மானம்

மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மறை மாவட்டங்களின் ஆயர்களும் குரு முதல்வர்களும் அடங்கிய வடக்கு - கிழக்கு ஆயர் மன்றக்கூட்டம் கடந்த 17.01.2024 வவுனியா திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் மறைமாவட்டங்களுக்குப் பொதுவான செயற்பாடுகள் பற்றி ஆராயப்பட்டு, நான்கு மறைமாவட்டங்களும் இணைந்ததான பணிகள் ஊக்குவிக்கப்படவேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் நான்கு மறைமாவட்டங்களிலும் பணியாற்றும் மறைமாவட்ட, துறவற குருக்களுக்கான தவக்காலத் தியான ஒன்றுகூடல், நான்கு மறைமாவட்டங்களிலும் பணியாற்றும் மறையாசிரியர்களுக்குப் பயிற்சி நெறி ஆகியவற்றை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைதி ஆய்வு மையம் நிறுவுதல், விவிலியத்தை அச்சிட்டு வெளியிடுதல், தமிழ்ப் பிரதேச கரையோர மீனவர்கள் பிரச்சினை போன்றவை பற்றியும் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## சகவாழ்வு அமைப்பின் ஆலோசகராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் நியமனம்



நீதி, மற்றும் சிறைச்சாலை விவகாரம், யாப்பு சீர்திருத்தங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் யாழ்ப்பாண மாவட்ட சக வாழ்வு அமைப்பின் ஆலோசனைக் குழு அங்கத்தவராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வு நீதி, மற்றும் சிறைச்சாலை விவகாரம், யாப்பு சீர்திருத்தங்கள் அமைச்சர் கௌரவ விஜயதாச ராஜபக்ச அவர்களின் தலைமையில் கடந்த 15ஆம் திகதி யாழ். நாகவிகாரை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் அங்கத்தவராக அனைத்து இன, மத மக்களிடையே நல்லுறவைப் பேணி சக வாழ்வை மேம்படுத்த ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கும் முகமாக நீதி அமைச்சினால் இப்பதவியும் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கான கனடா நாட்டுத் தூதுவர் குழு யாழ். ஆயருடன் சந்திப்பு




இலங்கைக்கான கனடா நாட்டுத் தூதுவர் குழு யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த 09ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் கனடா நாட்டு உயர் ஸ்தானிகர் எரிக் வால்ஸ், தூதுவர் குழுவின் அரசியல் செயலாளர் பற்றிக் பிக்கறிங் மற்றும் அரசியல் அதிகாரி சாகித்தியன் கணேசநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ் மறைமாவட்டங்களில் பணியாற்றும் குருக்களுக்கான தவக்கால ஒன்று கூடல்




மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மறை மாவட்டங்களில் பணியாற்றும் மறைமாவட்ட, துறவற குருக்களுக்கான இறைவேண்டுதல் ஆண்டின் தவக்கால யாத்திரையும் தியானமும் வருகிற மார்ச் மாதம் 04ம் திகதி மடுத்திருத்தலத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம் மேற்கொண்டுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் திருப்பலி, சிலுவைப்பாதைத் தியானம், திருச்செபமாலை ஆகிய பக்திச் செயற்பாடுகளில்குருக்கள் கலந்து கொள்வார்கள். நான்கு மறைமாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான குருக்கள் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

## சவால்மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடு

மேற்படி இரண்டாவது ஆய்வு மாநாட்டை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தை வழங்கிவரும் கிறிஸ்தவ நாகரிகத்துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து 'சவால்மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு' என்னும் மையப்பொருளில் நடாத்தவுள்ளது. இது 2024ம் ஆண்டு மாசி மாதம் 01ம், 02ம் திகதிகளில் நடைபெறும்.

அனைத்து மக்களின் பொதுவாழ்வு, பொதுநலன்கள் ஆகியவற்றோடு தொடர்புபட்ட பல்வேறு தளங்களில் எவ்வித பாரபட்சமுமின்றிச் செயற்படும் குறிப்பிடத்தக்க பங்காளியாக ஆசியச் சூழமைவில் கிறிஸ்தவம் திகழ்கிறது. ஆகவே கிறிஸ்தவ கற்கைகளில் நடாத்தப்படும் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடானது இலங்கையிலும் பல்வேறு ஆசிய நாடுகளிலும் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களைப் பேணுவதற்காகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய கிறிஸ்தவத்தின் முயற்சிகளை அறிவியல் பூர்வமான, முறையியல் சார்ந்த ஆய்வுகளின் வழியாக ஆவணப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. ☞ 07

# எமது எண்ணம்

## தென்னாபிரிக்காவின் முயற்சி காசாவில் போர் நிறுத்தப்படுமா?

இஸ்ரேல் கமாஸ் மோதல் ஆரம்பித்த பின்னர் இது வரையும் சிறுவர்கள் உட்பட சுமார் இருபத்து மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். உலகம் இப் படுகொலைகளைத் தடுக்க முற்பட்டாலும் போர் நீடிக்கிறது.

இப் பின்னணியில் காசாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை அமெரிக்கா கண்டித்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் அமைதியாக இருக் கின்றன.

ஆனாலும் அமெரிக்காவை விடவும் ஐரோப்பிய நாடுகள் காசாவில் நடக்கும் மனிதப் படுகொலைகளைக் கண்டிப்பதுடன் இஸ்ரேல் அரசு மீதும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. காசாவில் தொடரும் உயிரிழப்புகள் ஏற்க முடியாதவை என நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தியா அறிவித்துள்ளது.

பலஸ்தீன காசா பகுதியில் நிலவும் சூழல் குறித்து இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டைத் தெரிவித்து உரையாற்றும் போது இந்தியாவின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஆனாலும் இஸ்ரேல் அரசுடன் இந்திய மத்திய அரசு கொள் கையளவில் கைகோர்த்திருக்கிறது. தென்னாபிரிக்க அரசு இன அழிப்பு என்று வழக்குத் தாக்கல் செய்திருப்பதை இந்திய மத்திய அரசு இதுவரையும் பகிரங்கமாக வரவேற்கவில்லை. மதில்மேல் பூனை போன்று உள்ளது.

ஆகவே அமெரிக்க - இந்திய அரசுகள் இஸ்ரேலுடன் நிற்பதை அறிந்தே தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கைத் தமிழ்த்தேசிய அரசிய லில் ஈடுபடும் தமிழ்க் கட்சிகளும் பகிரங்கமாக வரவேற்கவில்லை என்பது தெ ரிகி றது. தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் பாராட்டவில்லை.

இஸ்ரேலுடன் இணைந்து கமாஸ் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதில் அமெரிக்க இந்திய அரசுகள் ஓரணியில் நிற்கின்றன. தற் போதைய புவிசார் அரசியல் சூழலில் வல்லரசுகளிடையே எழுந்துள்ள அரசி யல் போட்டியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா முற்று முழுதாக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பாளனாக மாறியிருக்கிறார்.

அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் எதிராளியாகத் தென்னா பிரிக்கா, சர்வதேச நீதிமன்றத்தில் பலஸ்தீன மக்கள் சார்பில் காசாவில் நடப்பது இன அழிப்பு என்று பகிரங்கப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்திருந்தாலும் அதனைப் பலஸ்தீனப் புலம்பெயர் அமைப்புகள் நன்கு பயன்படுத்தி வருகின்றன.

சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்த முதல் நாள் விசாரணை யில் தனது தரப்பு வாதங்களைத் தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளது. காசாவில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தென்னாபிரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க மாநில அரசுகளின் உறுப்பினர்கள் இருநூறு பேர் காசா வில் போர் போர்நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி ஜோ பைடனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சென்ற ஒக்ரோபர் ஏழாம் திகதி போர் ஆரம்பிக்கப்பட்ட நான்கு மாதங்களுக்கும் குறைவான நிலையில் காசாவில் இறந்தவர்களின் எண் ணிக்கை 23 ஆயிரத்தையும் கடந்துள்ளதாகவும் இதனால் போரை நிறுத்துமாறும் அமெரிக்க உள்ளூர் பொது அமைப்புகளும் ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியிருக்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க எழு நூறு இஸ்ரேல் மக்கள் விரும்பம் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்களே செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இஸ்ரேலிய மக்களில் எழுபத்து ஐந்து சதவீதமான மக்கள் காசாவில் போர் நடப்பதை விரும்புகின்றனர் என்றும் இந்த நிலையில் எழுநூறு பொது மக்கள் பலஸ்தீன மக்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் கூறுகின்றன.

இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் கணிசமான அளவு இஸ்ரேலிய மக்களுக்கு அச்சம் ஏற்பட்டு விட்டதாக அரபு ஊடகமான நியூஅரப் (newarab) என்ற ஆங்கில செய்தி இணையத்தளம் கூறுகின்றது.

மியன்மாரில் ரோகின்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இன அழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கி வரும் பிரித்தானியா, காசா வில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக அமைதியாக இருக்கின்றது.

சட்ட ஆதாரங்களைத் தேட வேண்டும் என்று மாத்திரம் பிரித் தானியா கூறியிருக்கிறது. அதேபோன்று கனடாவும் கூறுகின்றது. காசாவில் நடப்பது இன அழிப்பு தொடர்பான சர்வதேச சட்டங்களைப் பயன் படுத்த வேண்டும் என்றும் கனடா வலியுறுத்தி யிருக்கிறது. தென்னாபிரிக்க அரசு மேற்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது என்பதால், பிரித்தானிய, கனடா போன்ற நாடுகள் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குக்கு ஆதரவு வழங்கத் தயங்குகின்றன.

ஆகவே ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் குழம்பியிருந்த உலக அரசியல் ஒழுங்கு தற்போது இஸ்ரேல் - கமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து மேலும் குழப்பமடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்த பின்னர் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையேயான உலக அரசியல் அணுகுமுறையில் முன்னுக்குப் பின் முரணான வாதங்கள் எழுந்துள்ளதையும் அவதானிக்க முடியும்.

இந்த அரசியல் சூழ்நிலையை இலங்கை நன்கு பயன்படுத்துகிறது. குறிப்பாக முள்ளிவாய்க்கால் போரில் சுமார் நாற்பதாயிரம் மக்கள் கொல்லப் பட்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் காணாமல் போயிருப் பதாகவும் 2010 இல் வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ்த்தரப்பு பொதுப் பொறிமுறை ஒன்றை வகுத்துச் சிறந்த முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## சலேசியன் சபை அருட்தந்தையர்களால் நடாத்தப்பட்ட 'வந்து பாருங்கள்' நிகழ்வு



இறை அழைத்தலை ஊக்குவிக்கும் முகமாக சலேசியன் சபை அருட்தந்தை யர்களால் முன்னெடுக்கப்பட்ட இறை அழைத் தல் பாசறை 4ஆம் திகதி வியாழக் கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி சனிக் கிழமை வரை முல்லைத்தீவு மாங் குளத்தில் அமைந்துள்ள புனித டொன் பொஸ்கோ சிறிய குருமடத்தில் நடைபெற்றது.

சபையின் இறை அழைத்தலுக்குப் பொறுப்பான அருட்தந்தை மரிசல் டிலான் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் 'வந்து பாருங் கள்' என்னும் கருப் பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட் தந்தை டிலான், அருட் தந்தை செபஞானம், அருட்சகோதரர்களான தவக்குமார், றொசாந் தன் மற்றும் இருதயநாதர் ஆகியோர் வள வாளர்களாகக்கலந்து கருத்துரைகள், சிறப்புவழி- பாடுகள், காணொளிகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் என்பவற்றினூடாக மாணவர் களை நெறிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், மன்னார், இரத்தினபுரி மறைமாவட்டங்களைச் சேர்ந்த 60 வரையான மாணவர்கள் பங்குபற்றிப் பயன டைந்தனர்.

## அருட்சகோதரி தீபா சிவபாலன் அவர்களின் நித்திய அர்ப்பண நன்றி திருப்பலி



நல்லாயன் துறவற சபையைச் சேர்ந்த அருட் சகோதரி தீபா சிவபாலன் அவர்களின் நித்திய அர்ப்பண நன்றி திருப்பலி 13ஆம் திகதி ஒட்டுச்சுட்டான் கிறிஸ்து அரசர் ஆல யத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை கான்ஸ் போவர் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ் வில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நன்றித் திருப்பலி யும் தொடர்ந்து அருட் சகோதரிக் கான கௌரவிப்பும் இடம்பெற் றன.

குருக்கள், துறவிகள், அருட்சகோதரியின் உறவினர் கள், பங்குமக்களெனப் பலரும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## அருட்பணி எட்வின் சவுந்தரா அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ். மறைமாவட்டக் குருவும் பிரமந்தனாறு புன்னைநீராவி ஆங்கில வளாகத்தின் நிறுவுனருமாகிய அமரர் அருட்திரு எட்வின் சவுந்தரா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு 13ஆம் திகதி கடந்த சனிக்கிழமை தர்ம புரம் மற்றும் குளமங்கால்பங்குகளில்நடைபெற்றன.

தர்மபுரம் பங்குத்தந்தை அருட் பணி நிக்சன் கொலின்ஸ் அவர் களின் தலைமையில் புன்னை நீராவி ஆங்கில வளாகத்திலும் குளமங்கால் பங்குத் தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் புனித சவேரியார் ஆலயத்திலும் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் திருப்பலிகளும் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அமரர் அருட்திரு எட்வின் சவுந்தரா அவர் கள் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் பல ஆண்டுகள் விரிவுரையாளராகப்பணியாற்றியுள்ள துடன் 1995ற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வெளி நாட்டுக்குப் புலம் பெயர்ந்து அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் மறைமாவட்டத்தில் இணைந்து அங்கும் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

புலம்பெயர் தேசத்திலிருந்து நாடு திரும்பி வன்னிப் பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்க ளின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக் கோடு தனது முயற்சியினால் பிரமந்தனாறு புன்னை நீராவிப் பிரதேசத்தில் ஆங்கிலக் கல்விக் கூடம் ஒன்றை நிறுவி ஆங்கிலக் கல்வியைக் கற்பித்து வந்துள்ளார் என்பதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

## 'கலை மாலைப் பொழுது' கலை நிகழ்வு

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட கலை மாலைப்பொழுது கலை நிகழ்வு 06ஆம் திகதி கல்லூரி பொது மண்டபத்தில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்க தலைவர் திரு. அன்ரன் டயஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். திருமறைக் கலாமன்றத்தால் 'ஏகலைவன்' நாட்டுகூத்தும், இளவாலை திருமறைக் கலாமன்றத்தால் திரு. றொபின்சன் அவர்களின் நெறியாள்கை யில் 'லீசிங் மாப்பிள்ளை' நாடகமும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களால் 'விருது யாருக்கு' நாடகமும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளால் தேசிய ரீதியில் முதலிடத்தை பெற்ற நடனமும் ஆற்றுகை செய்யப்பட்டன.



## அகவொளி திருமண சேவை

யாழ் மறைமாவட்டத்தின் அகவொளி குடும்ப நல மையமானது மாசி 2024 இல் இருந்து நம் மக்களுக்கான திருமண சேவை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இதன் முக்கிய நோக்கம் திருமணத்திற்காகக் காத்திருக்கின்ற இளம் உள்ளங்கள் தங்களுக்கான தகுந்த வாழ்கைத்துணையைத் தேடுவதற்கான களத்தை அமைத்துக் கொடுப்பதாகும்.

இதற்காகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அகவொளி மையத்தில் இருந்து எடுத்துப் பெற்றோர் அதில் தங்கள் பிள்ளைகளின் விபரங்களை நிரப்பி அனுப்பும் இடத்து அகவொளி மையமானது அதிலிருந்து பொதுவான விடயங்களை எடுத்து மாதம் இருமுறை வெளி வருகின்ற பாதுகாவலன் பத்திரிகையில் **"மணமகன் தேவை", "மண- மகள் தேவை"** என்ற தலைப்பில் பிரசுரிக்கப்படும். இதன் போது அவர்கள் பெயர் வி- பரமோ, புகைப்படமோ பிரசுரிக்கப்படமாட்டாது. பொதுவான விடயங்களான வயது, சமயம், கல்வித்தகைமை, தொழில், மற்றும் பிரதேச செயலகப்பிரிவு என்பவையே பிரசுரிக்கப்படும்.

இது பற்றிய மேலதிக தகவல்களை அறிய விரும்புவோரும், தகவல்களை வழங்க விரும்புவோரும் புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள **அகவொளி குடும்ப நல மையத்தோடு** தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**இயக்குநர்**
**அகவொளி குடும்ப நல மையம்,**
**சென். பற்றிஸ் வீதி, யாழ்ப்பாணம்.** 077 942 2970- 021 222 2856 - 077 904 7651



# பொங்கலோ பொங்கல்!

## ஒரு விரிவான பார்வை

பொங்கலோ பொங்கல்! வாசகர் அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துகள். பானையில் பால் மட்டும் பொங்கினால் போதாது, உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் அன்பு பொங்கி வழியவேண்டும். விருந்தோம்பல் பண்பு பொங்கி வளரவேண்டும்.

பொங்கல் விழா, உழவர் விழா. இது தமிழர் விழா. முன்னைய காலத்தில் உழவர் அறுவடை செய்து, அந்த அறுவடையின் முதலரிசியில் பொங்குவது தான் பொங்கல் விழா. இந்த அறுவடையை நம்பியே உழவர் வாழ்ந்தார்கள். அதனாலேயே "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்றொரு வாக்கு உழவர் வாழ்வில் இணைந்தது. அது உண்மையும் கூட.

காரிருளிலும், கடும் வெய்யிலிலும் நிலத்தை உழுது, எரு இட்டுத் தண்ணீரோடு கண்ணீரையும் கலந்து, பயிர்களைக் காத்து வளர்த்த அந்த உழவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விழா தான் பொங்கல் விழா. பருவமழையை நம்பியே உழவர் வாழுகிறார்கள். பருவமழை தவறுமானால் உழவர் வாழ்வும் கருகும்.

நான் வளரும் காலத்தில் தோட்டம் வேறாகவும், வயல் வேறாகவும் இருந்தன. வயலில் நெல் விதைத்தோம், தோட்டத்தில் காய்கறி வளர்த்தோம். வயலும் தோட்டமும் இணைந்து நல்லுணவு தந்தன. தோட்டம் செய்வோரை உழவர் என்று அழைப்பதில்லை. தோட்டங்களில் கிணறுகள் இருந்தன. அதனால் தோட்டம் செய்தோர் மழையையே நம்பி வாழ்ந்தவர்கள் அல்ல. இதையும் இங்கே பதிவு செய்வது நல்லது. அதே போன்று, கடலுணவைத் தருபவர்கள் கடற்தொழில் செய்வோர் ஒவ்வொரு முறையும் கடலோரம் செல்லும் பொழுது இரவிரவாகக் கடலுக்குச் சென்று ஆழ்கடல் தேடி எமக்குக் கடலுணவு கொண்டு வந்து தருபவர்களை நான் நன்றியோடு நினைக்கின்றேன். இவர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்துத் தானே தொழில் செய்கிறார்கள்? வயலில் கடின உழைப்பைக்கொடுத்து எமக்குச் சோறு தரும் உழவர்களும் தொழிலாளிகள்தான். தோட்டத்தில் கடுமையாக உழைத்து எமக்குக் காய்கறிதருவோரும் தொழிலாளிகள் தான். கடல் சென்று இரவிரவாகக் கடல்தரும் கடலுணவை எமக்குத் தருவோரும் தொழிலாளிகள் தான். இவர்களையெல்லாம் ஒன்றிணைத்து, இவர்களுக்கெல்லாம் நன்றி கூறும் நாளாகவே நாம் பொங்கல் விழாவைப் பார்க்க வேண்டுமென நான் நினைக்கின்றேன்.

### பொங்கலில் கலந்தவை

வழமையாகப் புதுப்பானையில்தான் பொங்குவார்கள். இந்த "வழமையாக" என்ற சொல்லை இங்கு எழுத வேண்டிய அவசியமில்லை. உழவர் காலத்தில் எல்லோரும் அனைத்து வீடுகளிலும் புதுப்பானையில் தான் பொங்குவார்கள். இன்று, நாகரிகம் என்ற போர்வையில் பல செயற்கையான விடயங்கள் நடைபெறுகின்றன. உதாரணம்: அலுமினியப் பானையில் பொங்குவோர் உண்டு. பொங்கல் வாசனை அங்கில்லை. பானை எங்கிருந்து வருகிறது? குயவர் மண்ணில் இருந்து பானையைக் குடைகிறார்கள். அதனாலேயே மண் பானை எனப் பெயர் பெற்றது.

இந்த மண்பானையில் பால் ஊற்றுகிறார்கள். இந்தப் பால் எங்கிருந்து வருகிறது? பசுவில் இருந்து பசுவை வளர்ப்பது உழவர். பொங்கல் அன்று இந்த மாட்டிற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மாட்டைக் கொண்டுதானே உழுகிறார்கள். மாடுதானே எருவும் தருகிறது! அதே மாடுதானே பாலையும் தருகிறது. இந்த மாட்டைக் கொல்லலாமா? இதனாலேயே மாட்டுக்கு ஒரு முக்கியத்துவத்தை உழவர் கொடுக்கிறார்கள். பின்னர் "மாட்டுப் பொங்கல்" என்று ஒரு நாளை ஒதுக்கிவிட்டார்கள். நெருப்பின்றிப் பொங்கலாமா?விறகு தேவை. ஆகவே மரம் தேவை. கரும்பையும் பொங்கலையும் பிரிக்கலாமா? கரும்பு பயிர் செய்வோரை மறக்கலாமா? எதற்காக இவ்வளவு விரிவாக எழுதுகிறேன்! இவர்கள் அனைவரையுமே நினைத்து நன்றி கூறுவது அவசியம். அதுதான் உண்மையான அர்த்தம் தரும் பொங்கல் விழா.

சூரியனுக்கு நன்றி கூறுவதும் உண்டு. நவீன விஞ்ஞானம் ஒன்றைத் தெளிவாகச் சொல்லியுள்ளது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. உறவு கொண்டவை. இவ்வழி நின்று சூரியனுக்கு மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சத்துக்கும் நன்று கூறுவோம். இது பொங்கலை விரிவாகப் பார்க்கும் ஒரு பார்வை. அநாகரிகம் வளர்ந்த இந்த நாட்டில் ரக்டர் கொண்டு உழுகிறார்கள். உரம் இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த உரத்தில் என்னென்ன கலக்கப்படுகின்றன என்பது பெரிய ஒரு கேள்வி. காஸ்குக்கரில், அலுமினியப்பானையில் பொங்கி அந்தப் பொங்கல் வாசனை அழிந்து போய்விட்டது மாட்டைக் குளிப்பாட்டி, பொட்டிட்டு, சந்தனம் பூசி, மாலைஅணிவித்து மாட்டை மதித்த இனம், இன்று ரக்டரைக் கழுவி, பொட்டிட்டு, சந்தனம் பூசி, மாலை அணிவித்துப் பொங்குகிறோமே? இப்படிப்பட்ட செயற்கை வந்த காரணத்தினாலேயோ கிழக்கு மாகாணத்தில் "பொங்கல் போட்டி" வைத்து பொங்கலின் அர்த்தத்தை அழித்து விட்டார்கள். அநாகரிகத்தில் வளர்ந்த மக்கள்

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு நான் எதிரானவன் அல்ல. ஆனால், தொழில்நுட்பம் மனிதத்தை அழிக்கக்கூடாது. பல துறைகளில் தொழில்நுட்பம் மனிதத்தை அழிக்கின்றது. இயேசு பிறப்பு விழாவைக் கொண்டாடின சிலர் "குடில்" போட்டி வைத்து பரிசு வழங்கினார்கள். புனித பிரான்சிஸ் குடில் அமைத்த முறையும், அதன் அர்த்தமும் முற்றாக இங்கு அழிந்து விட்டது. இயேசு பிறப்பைப் பிரதிபலித்து, அந்தச் சூழலின் வறுமையையும் எளிமையையும் எடுத்துக்காட்டவே புனித பிரான்சிஸ் குடிலை உருவாக்கினார். ஆனால் இன்று அடையாளம் சிதைந்து, அது சுட்டிக் காட்டும் யதார்த்தமும் சிதைந்து விட்டது. இங்குதான்மதமும் அர்த்தமின்றி வெறும் அடையாளங்களையே வளர்க்கின்றது.

### அச்சாணி

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் பாடினார். உணவு கொடுத்தவன் உயிர்கொடுத்தவன். எந்தத் தொழிலைச் செய்தாலும் அத் தொழில் நல்ல தொழில்தான். தொழில்களில் உயர்ந்தது தாழ்ந்தது என்ற வேறுபாடில்லை. ஆயினும் எத் தொழிலைச் செய்தாலும் அவர்களுக்கு உணவு வேண்டும். தமிழர்களின் அடிப்படை உணவு சோறு. அந்தச் சோற்றைத் தருபவன் உழவன். அதனால்தானே வள்ளுவர்

"உழுவார் உலகத்தார்க்கு அணி அஃது எழுவாரை
எல்லாம் பொறுத்து ஆற்றாது (குறள் 1032)

என்று குறள் யாத்தார். அனைத்துத் தொழில்களுக்கும் அச்சாணியாக அமைந்தது உழவர். அச்சாணியாக அமைந்த காரணத்தினால் உழவர் மேம்படுத்தப்பட்டார்களா, அச்சாணியாக இருப்பது வேறு , உயர்வு தாழ்வு வேறு.

விருந்தோம்பல் பண்பு தமிழர் பண்பாடு. யார் எந்த நேரமும் வீட்டிற்கு வந்தாலும் அவர்களை உபசரித்து விருந்தோம்பல் தமிழர் பண்பாடு. ஆனால், அநாகரிகத்தில் வளர்ந்த நாம், இன்று யாராவது வீட்டிற்கு வந்தால், அதுவும் உண்ணும் நேரம் வந்தால் இன்னமும் பசியோடு வந்தால், "சொல்லிவிட்டு வந்தாயா" என்று கேட்கும் அளவிற்கு நாம் அநாகரீத்தில் வளர்ந்து விட்டோம்.

நான் மேற்கூறிய தமிழர் பண்பாட்டை "வெந்து தணிந்தது காடு" என்ற திரைப்படம் ஓரிடத்தில் அழகாக எடுத்துக் காட்டியது.

### பொங்கல் விழா ஒரு நன்றி விழா

சில தமிழ் சொற்களில் ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. அக்கவர்ச்சியில் ஒரு மலர்ச்சி உண்டு. அம் மலர்ச்சியில் ஒரு மகிழ்ச்சி உண்டு. அப்படிப்பட்ட பல சொற்களில், "பொங்கல்" என்ற சொல்லையும் இணைத்துக் கொள்ளலாம். "பொங்கலோ பொங்கல்" என்று உரக்கச் சொல்லும் பொழுது அந்த ஒலியில் ஒரு மலர்ச்சி உண்டு. அந்த மலர்ச்சியில் ஒரு மகிழ்ச்சியுண்டு. ஒரு பெனடிக்ரின் துறவி மிகத் தெளிவாகச் சொன்னார் "மகிழ்வாக இருப்பதனால் நான் நன்றி கூறவில்லை. நான் நன்றியுடையவனாக இருப்பதினால் மகிழ்வாக உள்ளேன்"

நன்றி எவ்வாறு மகிழ்ச்சியைக் கொண்டு வரும்? நன்றி என்பது ஓர் உணர்வு. இந்த உணர்வு இறுகிய மனதை இலகுவாக்கி விடுவிக்கின்றது. அந்த விடுவித்தலில் ஒரு விடுதலை உணர்வுண்டு. அதுதான் மகிழ்ச்சி. நன்றியாக வாழும் பொழுது பதட்ட நிலையில் இருந்து விடுபடவும், மன அழுத்தமின்றி வாழவும், மன அழுத்தத்தைத் தவிர்க்கவும் உதவுகிறது. நல்ல தூக்கம் வரும், நோவிலிருந்து விடுபடவும், உறவுகளை வளர்க்கவும் நன்றியுள்ள மனம் உதவுகின்றது. குறைவற்ற வாழ்வை வாழவும், அன்பை வளர்த்து வாழவும், எளிமையிலும் தாழ்மையிலும் வாழவும் துணை செய்கின்றது. என்னோடு நான் இணையவும், அயலவருடன் இணையவும் நன்றியுணர்வு வழி சமைக்கின்றது. இதனாலேயே நன்றியாக வாழ்வது மகிழ்ச்சியைத் தருகின்றது.

### ஒன்பது பேரும் எங்கே?

இயேசுவின் வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்வை லூக்கா பதிவு செய்துள்ளார். லூக் 17:11-17 பத்துத் தொழுநோயாளர்கள் இயேசுவை சமேரியாப் பகுதியில் சந்திக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒத்த குரலில் "ஐயா, இயேசுவே எங்களுக்கு இரங்கும்" என்று உரக்கக் குரல் எழுப்பி வேண்டினார்கள். அவர்களின் நம்பிக்கையைப் பார்த்த இயேசு, "நீங்கள் போய் உங்களைக் குருக்களிடம் காண்பியுங்கள்" என்று இயேசு சொன்னார். ஒட்டு மொத்த நற்செய்தியில் இந்தக் குருக்களில் இயேசு நம்பிக்கை கொண்டவரல்ல என்பது தெளிவு. அதனாலேயே அவர்கள் பயணித்துக் கொண்டிருக்கும் பொழுதே நோயிலிருந்து அந்தப் பத்துப் பேரும் விடுபட்டார்கள். ஆயினும் அவர்களில் ஒருவர் மட்டுமே தனது நோய் அகன்று விட்டதை உணர்ந்து திரும்பவும் இயேசுவிடம் வந்து அவருக்கு நன்றி கூறி, புகழ்ந்துரைத்தான். அப்பொழுது இயேசு கேட்ட கேள்வி "மற்றைய ஒன்பது பேரும் எங்கே" அவர்களும் நோயிலிருந்து விடுபட்டவர்கள் தானே. திரும்பி வந்து நன்றி கூறியவன் சமாரித்தன். சமூகத்தால் விலக்கப்பட்டவன், ஒதுக்கப்பட்டவன். அவனுக்கு இருந்த நன்றி உணர்வு மற்ற ஒன்பது பேருக்கும் வரவில்லையா? யார் இந்த ஒன்பது பேரும்? இயேசுவின் வழமையான மோதல்களைப் பார்க்கும்பொழுது உட்குறிப்பாக இந்த ஒன்பது பேரும் யூதர்கள் என்று துணியலாம். அந்தப் பரம்பரையில் வந்த யூதர்கள் தான் அரக்கத்தனத்தோடு தமது கொடிய செயல்களை நியாயப்படுத்தி பலஸ்தீனர்களைக் கொன்று குவிக்கிறார்கள்.

அது சரி! இயேசு அந்தப் பத்துத் தொழுநோயாளிகளும் குணப்பட்டதும் திரும்பி வந்து தனக்கு நன்றி கூறவேண்டுமென எதிர்பார்த்தாரா? நற்செய்தியினூடாக இயேசுவைப் பார்க்கும் பொழுது அப்படிப்பட்ட ஓர் ஆளுமையை இயேசுவில் காணவில்லை. எதையும் எதிர்பார்த்து,இயேசுகுணப்படுத்தியதாகத்தெரியவில்லை. "நீங்கள் போய் குருக்களிடம் காண்பியுங்கள்" என்று இயேசு சொன்னதாகவே பதிவுண்டு. அதாவது, "குருக்களிடம் காண்பியுங்கள்" அத்துடன் அந்த நிகழ்வு முடிவுக்கு வருகின்றது. ஆனால் சமாரித்தன் குணப்பட்டதும் நன்றி உணர்வினால் உந்தப்பெற்று இயேசுவிடம் திரும்ப வருகின்றான். நாங்கள் ஒன்றை இனாமாகப் பெறும் பொழுது எங்களில் இயல்பாகவே ஒரு நன்றி உணர்வு தோன்றுகிறது. இந்த இயல்புக்கு மாறாக, அன்றேல்

**கரைவையூர்ச் செல்வம்**

மதிக்காது போகும் பொழுதுதான் அது தவறாகிறது. இதை உணர்ந்த ஞானி, வள்ளுவர் அதை எங்களுக்கு உணர்த்த குறள் வடித்தான்.

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)

எல்லா அறங்களையும் சிதைத்தாலும், ஏதோ ஒரு வழியில் அவர்கள் வாழ்வு பெறுவார்கள். ஆனால், நன்றியைச் சிதைத்தவர்களுக்கு வாழ்வே இல்லை என்று வள்ளுவர் நன்றிகெட்ட தனத்தைச் சாடினார். எனக்குச் செய்யப்பட்ட நன்மை, உதவிய தன்மை சிறிதோ பெரிதோ என்பது கேள்வி அல்ல. அந்த உதவி அல்லது அந்த நன்மை மிகச் சிறிதாக இருப்பினும் அதைப் பெரிதாக நினைத்து நன்றி சொல்வன், நன்றியாக வாழ்பவன் உயர்ந்து வாழ்வாள்/ன்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள் 102)

இதற்கு இன்னுமோர் படி மேற்சென்று வள்ளுவர் குறள் யாத்தார்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவர் (குறள் 104)

தனக்குச் செய்த உதவி, அல்லது தந்த கொடை ஒரு சிறு தினையளவாக இருந்தாலும், அதைப் பனையளவு உயர்த்திப் பேணுவோர் பயனைப் புரிந்தவர்கள். நன்றிப் பண்பில் வாழ்பவர்கள். இப்படிப்பட்ட நன்றியுடையோர் மகிழ்வாக வாழ்வார்கள்.

பானையில் பால் பொங்கினால் மட்டும் போதாது, மனதில் நன்றி உணர்வு பொங்க வேண்டும். விருந்தோம்பல் பண்பு பொங்க வேண்டும். அன்பு பொங்க வேண்டும். சமூகத்தில் நீதி பொங்க வேண்டும். இதுவே எனது விரிந்த பரந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

பொங்கல் விழா உழவர் விழா என்றும், தமிழர் விழாவென்றும் நன்றி விழாவென்றும் மேலே குறிப்பிட்டி ருந்தேன். அவ்வாறெனில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் ஏன் பொங்கல் விழாவைக் கொண்டாடுவதில்லையா? நியாயமான கேள்வி. இதற்கு ஒரு நீண்ட பதில் உண்டானாலும், இங்கு சுருக்கமாகவே கூறிவிடுகின்றேன். மத்திய கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவம் பிறந்து வளர்ந்தாலும், கிறிஸ்தவம் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற பொழுது அது ஐரோப்பிய சூழலிலேயே வளர்ந்தது, ஆங்கில இலக்கியத்தைப் படிப்போமானால் அந்த இலக்கியத்தில் கிறிஸ்தவம் இளையோடுவதைப் பார்க்கின்றோம். ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவம் வளர்ந்த பொழுது அவர்களுக்குப் பாரம்பரியமான இந்திய மதங்கள் பற்றிய அறிவு வெகுவாக இருக்கவில்லை.

(தொடர்ச்சி 06ம் பக்)

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருமடல்




**அறிமுகம்**

குடும்பங்களின் மகிமையையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்த நம்முடைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பங்களில் மிகவும் அக்கறை கொண்டு "அன்பின் மகிழ்வு" ( AMORIS LAETITIA) என்கின்ற ஓர் அழகான அப்போஸ்தலிக்க திருமடலை சித்திரை மாதம் 08ம் திகதி 2016ம் ஆண்டு வெளியிட்டார்.

இத்திரு மடலானது தற்காலத்தில் திருமணம், குடும்பம் என்கின்ற அமைப்புக்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களை ஆராய்ந்து அவற்றிற்கு இறைவார்த்தையின் ஒளியில் காத்திரமான பதில்களை வழங்குவதால் திருஅவைக்குள்ளேயும் வெளியேயும் இத்திருமடல் ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இத் திருமடலின் தலைப்பே ஒரு குடும்ப வாழ்க்கையில் மிக முக்கிய அம்சமாக அன்பும் மகிழ்வும் இருக்க வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது. குறிப்பாக 2014 மற்றும், 2015ம் ஆண்டுகளில் உரோமையில் குடும்பங்கள் பற்றி நடைபெற்ற இரு ஆயர்கள் மன்றங்களில் பல்வேறு நாடுகளில் இருந்து பங்கு பற்றிய ஆயர்கள் குடும்பம் மற்றும் திருமணம் பற்றிப் பகிர்ந்த கருத்துக்களின் தொகுப்பாகவும் இத் திருமடல் அமைவதனால் இத்திருமடல் திரு அவையின் குடும்பங்களைப்பற்றிய ஓர் ஆன்மீகப் பொக்கிசமாகும். குறிப்பாக இத் திருமடல் அனைத்துக் குடும்பங்களுக்கான வழிகாட்டல்களையும், ஊக்கத்தையும் இன்னும் மேய்ப்புப் பணியில் ஈடுபடுபவர்களுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றது.

இன்னும் திருமண தயாரிப்பின் முக்கியத்துவம், குடும்பங்களில் விவாகரத்தின் தாக்கங்கள், இன்றைய நவீன யுகத்தில் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள சவால்கள், குடும்ப அங்கத்தவர்களின் ஆன்மீகப் பயணத்தில் திருச்சபையின் பங்கு போன்ற முக்கியமான விடயங்களில் இத் திருமடல் பல்வேறு நெறிப்படுத்தல்களை வழங்கி நிற் கின்றது.

குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் திருமணம் செய்து மணமுறிவில் இருப்பவர்களுக்கும் மறுமணம் செய்து கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்கின்ற தனி மனிதர்கள், குடும்பங்களுக்கும் திருச்சபை மேற்கொள்ள வேண்டிய இரக்கமும் கனிவும் கொண்ட ஓர் மேய்ப்பு பணி அணுகு முறையின் அவசியத்தை இத் திருமடலில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்துகிறார்.

எனவே இந்தப் புதிய ஆண்டில் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்பங்களுக்காக அளித்திருக்கின்ற இந்தப் பெரும் ஆன்மீக பொக்கிசமாகிய "அன்பின் மகிழ்வு" எனும் திருமடலின் உள்ள ஆன்மீக முத்துக்களை மிக ஆழமாகப் புரிந்து, நம்முடைய

**அருட்பணி. எம்.டேவிட்**

நடைமுறைக் குடும்ப வாழ்விற்கு தேவையான வழிகாட்டுதலைப் பெற அகவொளி குடும்ப நல மையம் அழைத்து நிற்கின்றது.

**சிந்தனைக்கு விருந்தாக:** கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அன்பு செய்ய ஏதாவது காரணம் தேவையா? (Thanks: Recipe for a Happy Marriage)

ஜக், சலி என்கின்ற தம்பதிகள் தமது திருமண வாழ்வில் 5 வருடங்களின் நிறைவின் மகிழ்வில் பின்வருமாறு உரையாடினார்கள்.

**சலி:** "என் அன்பே ஏன் என்னை விரும்புகிறாய்?, அன்பு செய்கிறாய்?, என்று எனக்கு சொல்ல முடியுமா?"

**ஜக்:** "என்ன காரணம் என்று என்னால் சொல்ல முடியாது ஆனால், நான் உம்மை முழுமையாக உண்மையாக அன்பு செய்கிறேன்"

**சலி:** "உன்னால் என்னை அன்பு செய்வதற்கான காரணத்தை சொல்ல முடியவில்லை என்றால் என்னை நீ அன்பு செய்கிறாய் என்று உன்னால் எப்படிக் கூற முடியும்?"

**ஜக்:** "எனக்குக் காரணம் சொல்லத் தெரியாது. ஆனால் உன்னை அன்பு செய்கின்றேன் என்பதை என்னால் நிரூபிக்க முடியும் "

**சலி:** "என்னுடைய நண்பியின் கணவர் எனது நண்பிக்கு ஏன் அவர் அவவை அன்பு செய்கிறார் என்ற காரணத்தை செல்ல முடியும் என்றால் ஏன் உம்மால் எனக்கு சொல்ல முடியாது?"

**ஜக்:** "சரி சரி நான் உம்மை அன்பு செய்வதற்கு காரணம் இவை தான்": நீ அழகானவள் அழகான குரல் வளம் உடையவள் அன்பானவள் அக்கறை உடையவள் சிந்தித்துச் செயற்படுபவள் அழகான புன்னகை உடையவள்"

சலி தன்னுடைய கணவன் கூறிய காரணங்களைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். ஆனால் துரதிஸ்ரவசமாக சிறிது நாட்களுக்குப் பின் சலி ஓர் விபத்தில் சிக்குண்டு கோமா நிலையை அடைந்து படுத்தபடுக்கையானாள். அந்த நாட்களில் தன் மனைவியை அன்போடும் பாசத்தோடும் பராமரித்து வந்த ஜக் அவளருகே இந்த ஓர் அழகான கடிதத்தை வைத்தான்.

"என் அன்பே, உன்னுடைய அழகான குரலுக்காக உன்னை அன்பு செய்து இருந்தால் இப்போது உன்னால் பேச முடியாது இருப்பதன் காரணமாக இந்நிலையில் என்னால் உன்னை அன்பு செய்திருக்க முடியாது.

நீர் என் மீது கொண்டு இருந்த அக்கறைக்காக நான் உம்மை அன்பு செய்து இருந்தால் தற்போது அந்த அக்கறையை உம்மால் எனக்கு காட்ட முடியாத நிலையில் இப்போது என்னால் உம்மை அன்பு செய்யதிருக்க முடியாது.

நீ எனக்குக் காட்டிய புன்னகைக்காக உன்னை அன்பு செய்து இருந்தால் இப்போது உன்னால் புன்னகைக்க முடியாத நிலையில் என்னால் உன்னை அன்பு செய்திருக்க முடியாது.

இப்பொழுது அன்பு செய்ய எனக்கு கட்டாயம் காரணம் தேவை என்றால் இந்த உன்னுடைய கோமா நிலையில் உன்னை அன்பு செய்ய என்னிடம் தற்போது எனக்கு எந்த காரணமும் இல்லை. ஆனாலும் நான் உன்னை அன்பு செய்து கொண்டு தான் இருக்கின்றேன். ஆகவே இப்போது புரிந்துகொள் "திருமணத்தில் தம்பதிகள் ஒருவரை ஒருவர் அன்பு செய்யக் காரணம் எதுவும் தேவை இல்லை. திருமண அன்பு நிபந்தனையற்றது" ●

---

## முப்முனைச் சாதனையாளர் ...

( 5ம் பக்கத் தொடர்ச்சி)

**8. யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் – இரண்டாவது அதிபராக:**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலே மெய்யியல் கல்லூரியாகத் தொடக்கப்பட்டு, 1983-இல் முழுமையான குருத்துவக் கல்லூரியாக வளர்ச்சி பெற்றிருந்த கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் முதலாவது அதிபர், மூத்த அருள்தந்தை பிலிப் பொன்னையா அடிகள் ஓய்வுபெற, அவரது பணிநிலைக்கு அருள்தந்தை S.J. இம்மானுவேல் 1986-இல் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களால் நியமிக்கப்பட்டு, தமது இறையியல் அறிவு அனுபவங்களை மணவாசனையுடன் பகிரத் தலைப்பட்டார்.

யாழ். குருத்துவக் கல்லூரியில் இடம்பெற்றுவந்த மெய்யியல் மற்றும் இறையியல் பாடநெறிகளுக்கு, ரோமாபுரி "ஊர்பானியானா" (Urbaniana) பல்கலைக்கழகத்தின் இளமாணிப் பட்டம் (Baccalaureate) என்ற அங்கீகாரத்தைப் பெறுவது என்பது, இலகுவானது அல்ல. ஆயினும், அதிபர் தந்தை இம்மானுவேல் அடிகளது பரந்த தொடர்பாடற் திறன்களின் உதவியுடன் 1994-1995 ஆண்டுகளில் இவை சாத்தியமானது பலரையும் வியக்க வைத்தது.

**9. யாழ்ப்பாண மறைமாவட்டத்தில், ஆயருக்கு அடுத்த நிலையில்– Vicar General எனப்படும் குருமுதல்வராக:**

குருத்துவக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றும் காலகட்டத்திலேயே,




மேலதிக பொறுப்பு ஒன்றும் அருள்தந்தை S.J. இம்மானுவேல் மீது சுமத்தப்பட்டது. அதாவது, ஆயருக்கு அடுத்த நிலையில், இறைமக்களுக்கும் குருக்களுக்கும் தலைமைத்துவம் வழங்கும் Vicar-General எனப்படும் குருமுதல்வராகவும் சேவையாற்றும்படி இவர் பணிக்கப்பட்டு, அந்த இறைபணியையும் ஏற்று, தம்மாலான விதத்தில் நிறைவேற்றினார்.

**10. போர்க் கொடுமையினால் இடம்பெயர்ந்த – மக்களோடு மக்களாக:**

போர்க் கொடுமையினால், 1995-இல் யாழ். வலிகாமப் பிரதேச மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்த போது, குருத்துவக் கல்லூரி மாணவர் மற்றும் ஆசிரியர் குழாமுடன் அருள்தந்தை இம்மானுவேலும் இடம்பெயர நேரிட்டது. குருத்துவக் கல்லூரியொன்று இயங்குவதற்கு மிகவும் அத்தியாவசியமான ஆவணங்கள், புத்தகங்கள், தளபாடங்கள் ஒருசிலவற்றையாவது காப்பாற்றி எடுத்துக் கொண்ட கல்லூரியினர், வன்னி நிலப்பரப்பில், கிளிநொச்சியிலே குருத்துவக் கல்லூரி மீள இயங்க வழிசமைத்தனர். ஓர் ஆண்டளவாக, பல்வேறு இடுக்கண்கள் நடுவிலும், குருத்துவக் கல்லூரியை அருள்தந்தை இம்மானுவேல் வழிநடத்தினார். எவ்வாறு எனினும், தமிழ்மக்கள் சார்பாக இவர் பகிரங்கமாக எடுத்த நிலைப்பாடுகள் காரணமாக, தொடர்ந்து இலங்கையில் பாதுகாப்பாக வாழ முடியாத சூழ்நிலையில், இவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது.

**11. ஜேர்மனி நாட்டிலுள்ள – முன்ஸ்டர் மறைமாவட்டத்தில்:**

இலங்கையை விட்டு வெளியேறிய அருள்தந்தை இம்மானுவேல் அவர்களுக்கு, ஜேர்மனி நாட்டு முன்ஸ்டர் மறைமாவட்டத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்ற இடமளிக்கப்பட்டது. முன்னர் புதிய குருவாக, தனது முதற் திருப்பலியைத் தான் ஒப்புக்கொடுத்த ஜேர்மனி நாட்டினருடன் எப்போதுமே தொடர்புகளை இவர் பேணி வந்தமையானது, இக்கட்டான இவ்வேளையில் இவருக்குக் கைகொடுத்தமை சிறப்பாகும். தாயகத்தைப் பிரிந்து வெளிநாட்டில் வாழ்ந்த காலத்தையும், அருள்தந்தை இம்மானுவேல் நன்மை பல செய்திட நன்கு பயன்படுத்திக் கொண்டார். குறிப்பாக, இலங்கையில் தமிழர்கள் ஏன் தமது உரிமைகளுக்காகப் போராடும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள் என்பதைத் தெளிவாக வெளிநாட்டவர்க்கு விளக்கியும், உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தும் வந்தார்.

**12. மீண்டும் – தாயக மக்களோடு:**

இலங்கையில் 2015-ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றங்கள், அருள்தந்தை S.J. இம்மானுவேல் சொந்தநாடு திரும்பக் கூடிய சூழலை ஏற்படுத்தியதால், இவர் தாயகம் மீண்டு, யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அவர்களின் அனுசரணையுடன், யாழ். ஆயர் இல்லத்திலேயே தங்கி வாழ்ந்து வருகிறார்.

அருள்தந்தை இம்மானுவேல் தனது நீண்ட வாழ்க்கையைப் பின் நோக்கிப் பார்க்கையில், தான் கற்பித்தலிலும் இறையியல் விரிவுரைப்பதிலுமே பெருமளவு நேரத்தைச் செலவிட்டு விட்டதாகவும், அடிமட்ட மக்களோடு பழகியதும் பணிபுரிந்ததும் போதாது என்று உணர்வதாகவும் கூறுகிறார். இதனால் மாலை வேளைகளில் இவர் தமது சக்கர நாற்காலியை இயக்கியபடி, சாதாரண மக்களோடும், குறிப்பாக சிறுவர் சிறுமியரோடும் அளவளாவி, அவர்களது வாழ்வின் குறைநிறைகளை அறியவும், கூடுமானால் அவற்றைச் சிறு அளவிலாவது நிவர்த்தி செய்யவும் முயன்றதைக் காணக் கூடியதாய் இருந்தது.

தற்காலத்தில், தான் இறைவேண்டுதலிலும் (அதாவது செபத்திலும்), இறைவார்த்தை மீதான தியானத்திலும் அதிக நேரத்தைச் செலவிட்டு, இறைவனுக்காகக் காத்திருப்பதாக அருள்தந்தை கூறுகிறார். கடந்தஆண்டிலே தான் ஆண்டவரின் திருப்பாடுகளின் பாஸ்கா காலப் பகுதியில் ஆண்டவரை நோக்கி ஒரு வேண்டுதல் செய்ததாக அருள்தந்தை S.J. இம்மானுவேல் கூறுகிறார்: "இறைவா! எனக்கு மகிழ்வான நீண்ட வாழ்வைத் தந்துள்ளீர். ஆனால், உமது சிலுவையில் எனக்குப் பங்குதர வேண்டும்" என்ற தனது வேண்டுதலுக்குப் பதிலாகத் தான், இறைவன் நோய் நிலையைத் தனக்குத் தந்துள்ளார் என்றும், இது தன்னைத் தூய்மையாக்குவதற்கே என்றும், புன்னகையுடன் பகர்கின்றார், அருள்தந்தை S.J. இம்மானுவேல் அடிகளார். ●

# மும்முனைச் சாதனையாளர்

# 90 வயதில் அருள்தந்தை S.J. இம்மானுவேல்

முதுபெரும் இறையியலாளரும், அரசியல் சிந்தனையாளரும், மற்றும் சமூகச் செயற்பாட்டாளருமான யாழ். மறைமாவட்டக் குருவானவர் அருள்தந்தை S.J. இம்மானுவேல் அடிகளார், கடந்த 2024 ஜனவரி 6-ஆம் திகதி தமது நிறைவான வாழ்வில் 90 அகவையைப் பூர்த்தி செய்துள்ளார். திருஅவையோடு தொடர்புபட்ட மூன்று வெவ்வேறு துறைகளிலே இவர் சாதனை பல புரிந்துள்ளவர் என்பதால், அருள்தந்தை "S.J." அவர்களை சிறந்தவொரு "மும்முனைச் சாதனையாளர்" என்று போற்றுதல் தகுமே! அந்த மும் முனைகளையும் சற்று நோக்குவோம்.

**1. இறையியல் பணி முனையிலே:**

சிறந்த இறையியல் பேராசிரியராகிய இவரது பணியானது, இலங்கை எனும் சிறிய வட்டத்துக்குள்ளே மட்டும் பரவி இருக்கவில்லை. மாறாக, உலகத் திருஅவைக்கும், குறிப்பாக ஆசியத் திருஅவைக்கும் பயன்படும் வகையில் வியாபித்திருந்தது. காரணம், FABC என்று அழைக்கப்படும், ஆசிய ஆயர் மன்றங்களின் சம்மேளனத்திற்குத் தலைமை தாங்கிய ஆயர்கள், தமக்கு ஆலோசனை வழங்கும் இறையியல் அறிஞர்களில் ஒருவராக இவரை நியமித்திருந்தார்கள்.

குறிப்பாக, 2-ஆம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தொலைநோக்குக்கு ஏற்ப, *திருஅவையில் பொது நிலையினரின் வகிபாகம், ஈடுபாடு, பணி நிலைகள் என்பன எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றியும், பிறமத சகோதரர்களோடு நல்லுறவைப் பேணும் வழிவகைகள் பற்றியும்,* ஆசிய ஆயர் மன்றங்களின் சம்மேளனப் பேரவையிலே இறையியல் ஆலோசனைகளை இம்மானுவேல் அடிகளார் வழங்கி வந்துள்ளார்.

**2. அரசியல் சிந்தனைப் பணி முனையிலே:**

கொழும்பு நகரில் இலங்கைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்திலேயே, தமிழ் மக்களின் உரிமைகளுக்கான அறவழிப் போராட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர் இம்மானுவேல். முதிர்ந்த குருவாக, யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இரண்டாவது அதிபராக, 1986 இல் பொறுப்பேற்ற காலத்தில் இருந்து, இராணுவத்தினருக்கும் போராளி இளைஞர்களுக்கும் இடையிலான மோதல்கள் வலுப்பெற்று, அதனால் பொதுமக்கள் பாதிப்புற்று இருந்த வேளைகளிலும் கூட, "தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக எழுந்து நிற்கவே வேண்டும்" என்ற உறுதிப்பாட்டுடன் இருந்தவர் இவர். அதுமட்டுமன்றி, தமது குருமாணவர்களுக்கும் ஆண்டவர் இயேசுவின் விடுதலை இறையியல் பற்றிய விழிப்புணர்வையும் ஊட்டி வந்தார்.


அதேவேளையில், தமிழ் மக்களின் உரிமைகளுக்கான கோரிக்கை ஏன் நியாயமானது என்பதைச் சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல, உலகினருக்கே எடுத்து விளக்கும் பணியையும் தனது எழுத்தாற்றல் மூலம் வெளியிட்டு, கட்டுரைகள், சிறுநூல்கள் வழியாக இப்பணியைக் கரிசனையோடு செய்துவந்தார்.

**3. சமூக சேவைப் பணி முனையிலே:**

வெறுமனே பிறர் அன்பு பற்றிய போதனைகள், வார்த்தை அளவிலே நின்று விடக்கூடாது, அவை பிறரன்புச் செயல்களாகப் பரிணமிக்க வேண்டும் என்பதை செயற்படுத்தியவர் இம்மானுவேல் அடிகளார். கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் இவர் இறையியல் கற்பித்துவந்த காலத்திலே, மலையகத் தோட்டத் தொழிலாளரின் வறுமை நிலையைக் கண்ணுற்றபோது, அங்குள்ள சிறுமியர்க்கென கண்டி நகரிலே விடுதியொன்றை நிறுவி, வெளிநாட்டினர் உதவியுடன் அதை நிர்வகித்து வந்தார். இதனால் தங்கள் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த பல பெண்கள், இன்று ஆசிரியைகளாகவும் கிராம உத்தியோகத்தர்களாகவும் வாழ்வில் முன்னேறி, அருள்தந்தை இம்மானுவேலை நன்றியுணர்வுடன் போற்றுகின்றனர்.

மேலும், இவர் யாழ்ப்பாணத்தில் பணிபுரிகையில், நான்காம் குறுக்குத் தெருவிலே "நற்சமூக நடுநிலையம்" ("Centre for a Better Society") என்ற நிறுவனத்தைத் தொடக்கி வைத்து, வசதி வாய்ப்புகளில் நலிந்தவர்களின் வாழ்வினை முன்னேற்றும் சில திட்டங்களை நிறைவேற்றி வைத்தார். "புதிய உலகம்" என்ற சஞ்சிகையைத் தொடக்கி நிர்வகித்து, முற்போக்கான சமுதாயச் சிந்தனைகள் பரவிட வழிகோலினார். இவற்றையெல்லாம் எண்ணும் போது நம் உள்ளத்தில், "இவரது நல்வாழ்வின் மும்முனைச் சாதனைகளுக்காக இறைவா, உமக்கு நன்றி!" என்ற செபமே ஒலிக்கிறது.

## யார் இந்த "S.J. இம்மானுவேல்"?



**1. "S.J." யின் – இளமைப் பருவம்:**

யாழ்ப்பாணம் மரியன்னை பேராலய நிழல் அருகே வாழ்ந்து வந்த சீமாம்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் சீரிய கத்தோலிக்க குடும்பத்திலே, நால்வரில் இரண்டாவது பிள்ளையாக 1934 ஜனவரி 6-ஆம் நாள் இம்மானுவேல் பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் பள்ளிமாணவனாக இருந்த காலத்திலேயே மரியாயின் சேனையில் இணைந்து, பொதுநிலை ஊழியராக இறைமக்களுக்குப் பணிபுரிந்து வந்தார். பின்னர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் பணியாற்றிய வேளையிலும் கூட, மரியாயின்சேனை ஊழியத்தில் ஆர்வமாகப் பணிபுரிந்தார். இதன்போது தான், பொதுநிலையினரின் பங்களிப்பு திருஅவைக்கு எத்துணைமுக்கியமானது என்பதை உணரத் தொடங்கினார்.



வாட்டசாட்டமான வாலிபன் இம்மானுவேலுக்கு வாழ்க்கைத் துணைவி ஒருத்தி தேவை என்று பெற்றோர் தேடத் தொடங்கிய வேளையில், இறைவன் தன்னை இல்லறத்துக்கு அல்ல, வேறொரு வாழ்க்கை நிலைக்கு அழைக்கிறார் என்று இம்மானுவேல் உணரத் தொடங்கினார். தனது குடும்பம் வறுமை நிலையில் தவித்துக் கொண்டிருந்தாலும், இறைமக்களுக்கான பொதுப் பணிக்கே இறைவன் தன்னை அழைக்கிறார் என்று உள்ளத்தின் ஆழத்தில் உறுதிபட உணர்ந்ததாகச் சான்று பகர்கின்றார். எனவே, "குருவாக உருவாக்கம் பெற்று, இறைமக்களுக்குப் பணிபுரிய இறைவன் என்னை அழைக்கிறார்" என்று இவ்வாறு உறுதியாக உணர்ந்து கொண்ட இம்மானுவேல், ஆயர் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் வழிநடத்துதலில், சிறிய குருமடத்தில் "வளர்ந்த வாலிபனாக" இணைந்து, இலத்தீன் மொழி கற்றார்.

**2. ரோமாபுரியில் – குருமாணவனாக:**

ஏற்கெனவே விஞ்ஞானப் பட்டதாரியாக விருந்த குருமாணவன் இம்மானுவேல், தனது குருத்துவ உருவாக்கத்தை ரோமாபுரியில் பெற்றுக் கொள்வது சிறப்பு என்று கருதி, ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்கள், இவரை ரோம் நகர் "ஊர்பானியானா" (Urbaniana) பல்கலைக்கழகத்திலே, மெய்யியல் மற்றும் இறையியல் துறைகளில் பயில அனுப்பி வைத்தார்.

**3. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தால் – இவர் ஆகர்ஷிக்கப்பட்ட மாயம்:**

வரலாற்றில் ஓரடி பின்னோக்கி வைப்போமா? 1958-ஆம் ஆண்டிலே பாப்பரசராக 23-வது அருளப்பர் / யோவான் (Pope John XXIII) தமது முதிர்ந்த வயதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட வேளையிலே, இந்தப் பாப்பரசர் திருஅவையிலே பெரிய மாற்றம் எதுவும் செய்வார் என்று யாரும் நினைக்கவில்லை. ஆயினும் சற்றும் எதிர்பாராத விதமாக, உலகளாவிய ஆயர்களின் பொதுச்சங்கம் ஒன்றைக் கூட்டுவதாக அவர் அறிவித்தார். அதுவே இன்று "இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம்" (Second Vatican Council) என்று அழைக்கப்படுகிறது. "திருஅவையின் யன்னல்களை அகலத் திறந்து விடுங்கள், தூய ஆவியார் புயல்போல வீசி, திருஅவையைத் தூய்மையாக்கட்டும்" என்ற பாப்பரசர் 23-ஆம் யோவானின் கூற்று, குருமாணவன் இம்மானுவேலின் வாழ்விலும் புரட்சித் தீ மூளக் காரணமானது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் ஆயர்கள் கலந்துரையாடல் புரிகின்ற வேளையிலே, சங்க மண்டபத்திலே சிறு பணி புரிந்த இளம் குருமாணவர்களில் இம்மானுவேலும் ஒருவனாய் இருந்தான். மாலை வேளைகளில் Karl Rahner, Edward Schillebeeckx போன்ற இறையியல் அறிஞர்கள் விவாதம் புரிந்த வேளைகளிலே, சொக்கிப் போனவனாக, இளைஞன்இம்மானுவேல் புதிய இறையியல் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டிருந்தான்.

*அந்தச் சங்கத்தில் உலக ஆயர்கள் விவாதித்த பேசுபொருள்களான திருவிவிலியத்தின் மைய முக்கியத்துவம், திருவழிபாட்டில் சீர்திருத்தத்தின் அவசியம், திருஅவையில் பொதுநிலையினரின் சரியான வகிபாகம், பிரிந்துள்ள கிறிஸ்தவ சபைகளிடையே ஒற்றுமையின் தேவைப்பாடு போன்ற புதிய இறையியல் எண்ணக்கருக்கள் எல்லாம், இளங் குருமாணவன் இம்மானுவேலின் சிந்தனைக் கோலங்களை, புதுப்புது எல்லைகளை நோக்கி வியாபிக்கச் செய்தன.*

**4. இளம் குருவாக – பொதுநிலையினரின் உயர்வு நாடி:**

இறையியலில் முதுமாணிப் பட்டப் படிப்பை நிறைவு செய்து கொண்டு, மறை மாவட்டம் மீண்ட புதிய குரு இம்மானுவேல் அவர்களை, ஆயர் எமிலியானுஸ்பிள்ளை இளைஞர் பணியில் ஈடுபடுத்தியதோடு, பொதுநிலையினரையும் புனித வின்சன் டிபோல் சபை போன்றவற்றையும் வழிநடத்தும் அலுவலையும் வழங்கினார்.

ஆயர் எமில் அவர்கள் பல தன்னார்வ இளைஞர்களை, இந்தியா-தமிழ்நாட்டின் திண்டிவனம் நகரில் அமைந்துள்ள TNBCLC மறைப்பணி மையத்தில் பயில அனுப்பி வைத்திருந்தார். பயிற்சி பெற்றுத் திரும்பிய அவர்கள், மறையாசிரியர்களாகப் பங்குகளில் நியமிக்கப்பட்டு, ஆர்வத்துடன் பணியாற்றி வந்தனர். இவர்களை ஒருங்கிணைத்து வழிநடத்தும் பாரிய பொறுப்பையும், ஆயர் எமில் புதிய குரு இம்மானுவேலிடம் ஒப்படைத்தார். பிற்பாடு, இளம் குரு இம்மானுவேல், மானிப்பாய்ப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டு, அங்கு இறைமக்களுக்குச் சிறப்பான பராமரிப்புப் பணியையும் நிறைவேற்றி வைத்தார்.

அருள்தந்தை அ.ஜெராட் சவரிமுத்து

**5. கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் – விரிவுரையாளராக:**

கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியின் நிர்வாகத்தை, 1972-ஆம் ஆண்டில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் (CBCSL: Catholic Bishops' Conference of Sri Lanka) பொறுப்பேற்ற கையோடு, மெய்யியல், இறையியல் துறைகளில் விரிவுரைகள் வழங்கக் குருக்கள் தேவைப்பட்டவேளையிலே, ஆயர் எமில் அவர்களின் பணிப்புரைக்கு இணங்க, அருள்தந்தை இம்மானுவேல் அக்குருத்துவக் கல்லூரியின் உருவாக்குநர் குழாமிலே இணைந்து கொண்டார்.

**6. கலாநிதி (முனைவர்) பட்ட ஆய்வும் – பொதுநிலையினர் பற்றியதே:**

ஓர் ஆண்டுக் கற்பித்தல் பணி நிறைவடைந்த பின்னர், விரிவுரையாளர் அருள்தந்தை இம்மானுவேல் அவர்கள், இறையியலில் மேற்படிப்புக்காக மீண்டும் ஒருமுறை ரோமை நகர் அனுப்பப்பட்டார். புதிய குருவாகப் பணிபுரிந்த காலத்தில், அருள்தந்தை இம்மானுவேல் இளம் மறையாசிரியர்களுடன் அந்நியோன்னியமாகப் பழகிய இவரது அனுபவங்கள் தான், பிற்காலத்தில் இறையியலில் கலாநிதி (முனைவர்) பட்டத்துக்காக இவர் செய்த ஆய்வுக்கு மையப் பொருளாய் அமைந்தன. "முகமில்லாத மறைப்பணியாளர்" (Recognizing the Face-less Minister) என்றுதான் இம்மானுவேல் அடிகளார், பொதுநிலை மறையாசிரியர்கள் பற்றிய தனது ஆய்வுக்கு மகுடம் இட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**7. கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் – இறையியல் துறைத் தலைவராக:**

முனைவர் பட்டம் பெற்று, கண்டி குருத்துவக் கல்லூரி மீண்ட அருட்தந்தை இம்மானுவேல், இறையியல் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டு, மாணவர்க்கு நல்லறிவு வழங்கும் ஆசானாக மொத்தம் பத்தாண்டுகள் அங்கு பணிபுரிந்தார். குருத்துவ உருவாக்கப் பணிக்கு அவசியமாகத் தேவைப்பட்ட பல முன்னேற்றங்களைச் செயற்படுத்தினார்.

(தொடர்ச்சி 04ம் பக்.)

# 20 வயது...!

**சிறுகதை**

**கவி கிறேஸ்**

**அ**து ஒரு சோலைக் கிராமம். அங்குதான் அமுதா பத்து வருசமாக அங்கு தான் வசித்து வந்தாள். அமுதா அக்கிராமத்திற்கு வரும்போது அவளுக்கு வயது பதினேழு. பார்ப்பதற்குக் குட்டிப் பெண்ணவள். ஓரளவு வெண்மை நிறமுடையவள். மெல்லிய உடற் தோற்றத்துடனும், சுருண்ட கூந்தலுடனும் பருவ வயதுப் பட்டாம் பூச்சியாய் வீடு மாற்றலாகி அக்கிராமத்திற்கு வந்தாள். வந்த சிறிது நாட்களிலேயே அக்கம், பக்கத்தில் இருந்தவர்களுடன் நல்லுறவை பேணிக்கொண்டாள். அந்தக் கிராமத்தில் என்ன நிகழ்வு நடந்தாலும் அமுதாவையும் அங்குள்ள அனைவரும் அழைப்பதுண்டு.

அவளின் வீட்டில் அமுதா மட்டுமே எல்லோருடனும் கலகலப்பாகக் கதைப்பவள். அவளுக்கு ஒரு தம்பி மற்றும் தங்கையும் உண்டு. இவளைக் காட்டிலும் நான்கு, ஐந்து வயது சிறியவர்கள். பெரிதாக யாருடனும் பேச மாட்டார்கள். அமுதாவின் தகப்பன் சிறு வயதிலேயே இறந்து விட்டார். அமுதாவின் தாய் ஒரு வீட்டில் பணிப்பெண்ணாக வேலை செய்வதால் அவர் பெரிதளவில் வீட்டில் இருப்பதில்லை. அமுதாவின் குரலை வைத்தே அந்த தெருவில் உள்ள அனைவரும் அவள் வீட்டில் இருக்கிறாள் என்பதை அறிந்து கொள்வார்கள். அவள் குரல் மட்டுமே அந்த வீட்டில் அதிகம் கேட்கும். அவள் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்திட்டாள் என்பதை அவள் கதைக்கும் சத்தத்தை வைத்தே அங்குள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள். அவள் அக்கிராமத்தில் உள்ள எல்லோருடனும் அவர்கள் வீட்டில் ஒரு பிள்ளையைப் போலப் பழகுவதால் அமுதாவை எல்லோரும்அம்முஅம்முஎனச்செல்லமாகஅழைப்பதுண்டு. அவளின் பெயரைப் போலவே அவளின் குணமும் இருந்தது. அன்பாகப் பேசுவாள். எந்நேரமும் வீட்டில் உள்ளவர்களுடனும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடனும் கலகலப்பாக கதைப்பாள். தனது வீட்டில் உள்ள கஸ்டத்தை எங்கும் எவரிடமும் காட்டிக் கொள்ளாதவாறு படிப்பிலும் பண்பிலும் சிறந்து விளங்கினாள். பள்ளிக்கூடமும் வீடும் என அவளது நாட்கள் அந்த வயதில் ஓடியது.

அந்த பருவ வயதில் எதைப்பற்றியும் யோசிக்காமல் அங்கும் இங்குமென சுற்றித்திரிந்து சிறகடித்துப் பறந்த பறவையவள். அந்த நாலு பேர் கொண்ட தூக்கணாங் குருவி கூடு எந்நேரமும் தாயின் அரவணைப்பிலேயே குடியிருந்தது. அமுதாவிற்கு அப்படியே அந்த நாட்கள் அழகாக ஓடியது. அவள் பள்ளிப் படிப்பை நிறைவாக முடித்து விட்டுச் சிறந்த பெறுபேறுகளுடன் மேற் படிப்பை படிக்க ஆயத்தமானாள். அப்போது அவளுக்கு வயது இருபது.

வாழ்வின் பாதைகளில் முதல் அடியெடுத்து வைத்த அந்த வயதில் அமுதா தன்னை பக்குவப் படுத்திக் கொண்டாள். வீட்டில் மூத்த பிள்ளை என்பதால் தகப்பனின் பொறுப்புக்கள் அமுதாவின் தலையில் இறக்கிவைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தனது குடும்பத்தை வழிநடத்தும் பொறுப்பு அமுதாவிற்கு இருந்தது. அவளின் பள்ளிப் படிப்பு வரை அம்மாவின் வருமானம் போதுமானதாக இருந்தது. அமுதா மேல்படிப்பு படிக்க கூடுதலான செலவும் அதிகரித்தது.

அமுதா படித்துக்கொண்டு பகுதி நேரம் வேலையுமென தனது செலவை ஓரளவு சமாளித்து வந்தாள். குட்டிப் பெண்ணாக அந்த ஊருக்குள் வந்தவள் தனது குடும்பத்தை ஓரளவு வழிநடத்தும் பெண்ணாகக் காலப் போக்கில் தன்னைத்தானே மாற்றிக் கொண்டாள். அவள் எல்லோரிடமும் நன்றாகப் பேசிப் பழகுவதால் அவளைச் சுற்றி எப்போதும் ஒரு நட்பு வட்டாரம் கூடியிருக்கும். ஆண், பெண் வேறுபாடின்றி, சிறியவர் பெரியவர் என்ற தாழ்வு மனப்பாங்கின்றி எல்லோருடனும் சரிசமமாகப் பழகுபவள். அமுதாவின் அன்பு கலந்த பேச்சும், சிரித்த முகத்துடன் அனைவரையும் இலகுவில் கவரும் விதமும் அவளை மற்றவர்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கச் செய்தது.

அந்த இருபது வயதில் அவள் தேடிச்சேர்த்த உறவுகள் எண்ணிலடங்காதவை. படித்தப்பிள்ளை. பல இடங்களில் பலரை அறிந்து அனுசரிப்பவள். ஆதலால் அவளை எல்லோருக்கும் தெரியவும், பிடிக்கவும் வேறு காரணங்கள் எதுவுமில்லை. அதனால் அமுதாவை தேடிச் சிலர் சந்திக்க வருவதும், அவளுக்கு நட்பு வட்டாரம் அதிகமாக இருப்பதை அங்கு வசிக்கும் பலர் அறிந்ததுண்டு. அங்கு இருக்கும் சிலர் அவளைத் தன் பிள்ளைப்போலப் பார்ப்பதுண்டு. அவளை அறியாத சிலர் மட்டும் இவற்றை வைத்து வடிவமைத்து பலகதைகள் சொல்லி இகழ்வதுமுண்டு. இருந்தும் அமுதா எவற்றையும் தனக்குள் உள்வாங்கி கொள்வதில்லை. அவள் தன்னுடைய உலகத்தில் என்றும் போல சந்தோசமாக வாழ்ந்து வந்தாள். நாட்கள் இப்படியே அவளுக்கு நகர்ந்து சென்றது. அக்கம் பக்கம் அவளை அறியாதவர்களின் வதந்தி பேச்சும் நாளுக்கு நாள் வளர்ந்து சென்றது. கண்டதையும் பேசி மகிழ்ந்து தம் கற்பனைக் கதைகளுக்குக் கண், காது, மூக்கு வைத்து அவளை வடிவமைத்தார்கள்.

பாவம் அவள்....

தகப்பனற்ற பிள்ளை.

அவளின் பண்பான குணத்தாலும் படித்த பலபேர்களின் நிழலில் அதிகம் வளர்ந்தவள் என்பதாலும் அவளுக்கு பல நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைத்திருந்தது. அமுதாவின் வரம்பு மீறா பேச்சுகளும், பிறரை மதித்து வழிநடத்தும் விதமும் அவளின் நட்பு வட்டாரத்தை என்றும் பெரிதளவில் வைத்திருக்கக் காரணமாக அமைந்தது. அவளைப் பிடிக்காத சிலர் அமுதாவை தவறான கண்ணோட்டத்தில் பார்த்தார்கள்.

பதினேழு வயதில் அம்மு என்று அவளை ஆசையாக அழைத்து................,

கதைத்துப் பேசி மகிழ்ந்தவர்கள் தான், அமுதாவின் இருபது வயதில் புறம்பேசி அவளைப் புண்படுத்தினார்கள். அந்தப் பருவ வயதிற்கு நடுவில் இருந்த மூன்று வயது இடைவெளி, அமுதா இருபது வயதை எட்டியபோது அவளை சூழ உள்ள மனிதர்களின் முகமூடிகளைக் காட்டிக் கொடுத்தது.

# பொங்கலோ....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவத்திற்கு வெளியே இருக்கும் இந்து மதத்தையும், பௌத்தத்தையும் படியாமலே அவை தள்ளி வைக்கப்படவேண்டுமென்ற ஓர் எண்ணம் அவர்களில் வெகுவாகப் பதித்திருந்தது. அந்த வழியில், தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் கொண்டாட்டங்கள், வழிபாட்டு முறைகள் அனைத்தையம் இந்து மதத்தோடு இணைந்தே பார்த்தார்கள். தொட்டியில் குழந்தையைக் குளிப்பாட்டிவிட்டு, அசுத்த நீரை வெளியே எறியும்பொழுது குழந்தையையும் சேர்த்தே எறிந்து விட்டார்கள். ஐரோப்பாவில் இருந்து வந்த குருக்களும், துறவிகளும் ஒட்டு மொத்தமாக, அவை அனைத்தும் புறசமயத்தைச் சார்ந்தவை **(Papan)** என்று கூறி தமிழ்க் கத்தோலிக்கரை அவர்களுடைய சொந்த சூழலிலிருந்து பிரித்து, அவர்களுடைய சுயமான கலை கலாசாரங்கள், கொண்டாட்ட முறைகளை அகற்றி அவர்களை ஒரு மேல்நாட்டுக் கலாசாரத்தில் வளர்த்தார்கள் இப்படிப்பட்ட ஒன்றுதான் பொங்கலும்.

### கதவுகள் திறந்தன

மூடிய வீட்டில் வதங்கிச் சுருங்கி, தேங்கிய ஒரு நிறுவனத்தாரை விடுவிக்க வந்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம். பல கதவுகள் திறந்தன. எம்முடன் காலகாலமாக வாழ்ந்த இந்து மக்களை வேறு கண்கொண்டு, பரந்த கண்கள் கொண்டு பார்க்க உதவியது. இந்துப் பாரம்பரியம் எது, தமிழர் பாரம்பரியம் எது என்று அடையாளம் கண்டு தமி ழர் பாரம்பரியங்களை, கலை, கலாசாரங்களை உள்வாங்க கிறீத்தவம் முனைந்தது.

இந்தப் பின்னணியில், 1973ம் ஆண்டு பொங்கல் விழாவை முதல்முறையாகக் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் தமிழ் பேசும் கத்தோலிக்க மக்கள் கொண்டாடினார்கள். அப்பொழுது நான் ஓர் இளங்குருவராக இருப்பினும், ஏதோ ஒரு துணிவுடன் இப்பொங்கலைக் கொண்டாடினோம். இலங்கை வானொலியில் அதுவும் புதிய உலகம் என்ற புதுப்பெயரில் தொகுத்து அளித்த கத்தோலிக்க நிகழ்ச்சியில் பொங்கல் வாழ்த்துக்கள் கூறி பொங்கலையிட்டு ஓர் உரையும் ஒலிபரப்பினேன்.

இன்று, பொங்கல் விழாவுக்கென திருவழிபாட்டுச் செபங்கள் ஆயர்களின் அனுமதியுடன் ஆக்கப்பட்டு பொங்கல் திருப்பலி என்று அழைக்குமளவிற்கு தமிழ்க் கத்தோலிக்கம் வளர்ந்து விட்டது. கவலையென்னவென்றால், திருவழிபாட்டில் பொங்கல் திருப்பலி வந்தாலும், அனேகமாக தமிழ்க் கத் தோலிக்கர் பொங்கல் விழாவைத் தங்கள் தங்கள் வீடுகளில் பொங்குவது அரிது. வழிபாட்டில் வந்த மாற்றங்கூட வாழ்க்கையில் வராதது கவலைக்குரியது.

பாரம்பரியப் பழக்கங்கள், வழக்கங்கள் அந்நியவையாக இருப்பினும் அவை எம்மில் ஊறிவிட்டதினால் அவற்றில் இருந்து விடுபட எம்மால் முடியவில்லை. பழக்கப் பற்றுகள் பழக்கங்களுக்கு அடிமைகளாவதும் உண்டு.

## பாதுகாவலன் மறை அறிவுப் போட்டி - 2024

பாதுகாவலன் பத்திரிகையில் பாதுகாவலன் மறை அறிவுப் போட்டியொன்றை இவ்வாண்டில் ஆரம்பிக்கின்றோம். இப்பகுதியில் கத்தோலிக்க மறை அறிவை மேம்படுத்தும் நோக்கோடு திருஅவையின் படிப்பினைகள், சூழமைவியல், இறையியல் சிந்தனைகள் மற்றும் வத்திக்கான், உலகத் தலத் திருஅவை, கத்தோலிக்க செய்திகளை மையப்படுத்தி இவ்வினாவிடைப் பகுதி அமைகின்றது.

ஒவ்வொரு மாதமும் ஆரம்பத்தில் வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையில் முன்னைய வினாக்களுக்கான விடைகள் வெளியிடப்படும். தெரிவு செய்யப்படும் முதன்மை வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் உயிர்ப்புப் பெருவிழாவின் போதும், கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் போதும் வழங்கப்படும்.

பத்திரிகை வெளியீட்டுத் திகதியிலிருந்து 20 நாட்களுக்குள் விடைகளை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**" பாதுகாவலன் மறை அறிவுப்போட்டி - 2024"**
**360, புனித வளன் கத்தோலிக்க அச்சகம்**
**பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
**- ஆசிரியர்**

1) பெருவெள்ளப் பெருக்கிலிருந்து தப்பிக்கொள்ளப் பேழையை உருவாக்கியவர் யார்?
1. மோசே 2. ஆதாம் 3. நோவா 4.யோனா

2) உடன்படிக்கையின் அடையாளமாக வானவில்லை யாருக்கு இறைவன் கொடுத்தார்?
1. ஆபிரகாம் 2. மோசே 3. நோவா 4. ஈசாக்

3) பேழையிலிருந்து நோவாவால் முதலில் அனுப்பப்பட்ட பறவை எது?
1. புறா 2. காகம் 3. சிட்டுக்குருவி 4. கழுகு

4) "ஆண்டவரே என் ஆயன், எனக்கு என்ன குறை" என்ற இறைவார்த்தைப் பகுதி குறிப்பிடப்பட்டுள்ள நூல் எது?
1. நீதிமொழிகள் நூல் 2. தொடக்க நூல் 3. எசாயா 4.திருப்பாடல்

5) பெரும்பான்மையான திருப்பாடல்களின் ஆசிரியர் யார்?
1. மோசே 2. தாவீது 3.சாலமோன் 4.சாமுவேல்

6) இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்னர் வரி வசூலிப்பவராக இருந்த திருத்தூதர் யார்?
1.பேதுரு 2. மத்தேயு 3. லூக்கா 4.யாக்கோபு

7) ஊதாரி மைந்தன் உவமையில் தனது சொத்துக்களை முதலில் இளைய மகன் என்ன செய்தார்?
1. சேமித்தான் 2. பாதுகாத்தான்
3. வீடு ஒன்றைக் கொள்வனவு செய்தான்
4. தீய வழியில் செலவு செய்தான்

8) டாரியஸ் மன்னனால் சிங்கக் குகையினுள் போடப்பட்டவர் யார்?
1. எசேக்கியேல் 2. எரேமியா 3. தானியேல் 4. யோவேல்

9) நபுக்கட்நசார் மன்னன் கண்ட மிகப்பெரிய சிலைக் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்?
1.சட்றாக் 2. மேசாக் 3. அப்சுட்நேகோ 4.தானியேல்

10) தனது அழகிற்குப் பேர்போன எந்த அரசி தனது மக்களாகிய யூதர்களை நாடு திருபத் திட்டம் தீட்டினாள்?
1. யோசேபல் 2. தேபோரா 3. எஸ்தர் 4. றூத்

11) இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்தவர் யார்?
1. அரிமத்தேயா ஊர் சூசை 2. நிக்கதேமு
3.சீரோன் சீமோன் 4. சக்கேயு

12) "ஏழு ஆண்டுகள் செழிப்பும் ஏழு ஆண்டுகள் வறட்சியும்" பற்றிய யாருடைய கனவுக்கு யோசேப்பு விளக்கம் கொடுத்தார்?
1.போத்திபார் 2.எகிப்திய மன்னன்
3.பாக்கர் 4.பட்லர்

13) மிகப்பெரிய மீனினால் விழுங்கப்பட்ட இறைவாக்கினர் யார்?
1. எசேக்கியே 2. யோனா 3. மீக்கா 4. கபகூக்

14) உலகைப் படைக்க இறைவன் எத்தனை நாட்கள் எடுத்தார்?
1. 7 நாட்கள் 2. 6 நாட்கள்
3. 4 நாட்கள் 4. 5 நாட்கள்

15) யாழ் மறைமாவட்ட முதலாவது ஆயர் யார்?
1. ஆயர் எமிலியானூஸ்பிள்ளை
2. ஆயர் தியோகுப்பிள்ளை
3. ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசகம்
4. ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

தொகுப்பு: அருட்பணி. தேயூட்தாஸ்




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(ராணி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: வாழ்க்கையைப் பலர் அனு பவிக்காமலே மறைந்து போவது போல் தெரிகின்றது. அதுவும் இந்த அவசரமான உலகில் பலர் வாழாமலே இறந்து போகின்றார்களோ என்ற ஐயம் எழுகின்றது! இவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை?**

ப: இத்தாலியச் சிற்பி ஒருவன் பனிக்கட்டிச் சிற்பங்களைக் கொண்ட ஒரு கண்காட்சியை நடத்தினான். அக்கண்காட்சிக்கு அவன் கொடுத்த தலைப்பு: "வாழ்க்கை மிகவும் சிறியது, உருகும் முன் அதை அனுபவியுங்கள்" என்பதாகும். உருகுவதற்கு முன் ஐஸ்கிறிமைச் சுவைக்க வேண்டும். அப்படியென்றால்தான் உண்மையான சுவையை அனுபவிக்கலாம்! வாழ்க்கையும் அப்படித்தான்.

*(றமேஸ், மன்னார்)*

**கேள்வி: சிறுசிறு சலுகைகளுக்காகப் பலர் நாயாக அலைகின்றார்களே! 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக அமையப்போகின்றது. அப்படியென்றால் நம்மில் பலர் நாயாக மாறி விடுவார்களோ என்று பயமாக இருக்கின்றது. உங்கள் கருத்து என்ன?**

ப: றமேஸ், வியட்நாம் பழமொழி ஒன்று இருக்கின்றது: "ஓர் எலும்பிற்காக, ஒரு நேர்மையான மனிதன், தன்னை ஒரு போதும் நாயாக்கிக் கொள்ளமாட்டான்" என்று! நேர்மையானவர்கள் நிமிர்ந்துதான் நிற்பார்கள்.

*(ஸ்ருதி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்கின்றார்கள்! இவ்வாண்டு, எவ்வாறாகப் போகப் போகின்றது?**

ப: ஸ்ருதி, தேர்தல் என்றால் நம் நாட்டில் திருவிழாதானே! அப்படியென்றால், இவ்வாண்டு தேர்தல் திருவிழாவாகத்தான் இருக்கும் என்று அடித்துக் கூறலாம்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: செல்வி உ. கில்மிஷா பற்றிப் பல விமர்சனங்கள் அவளுக்குச் சார்பாகவும் எதிராகவும் வந்துகொண்டிருப்பதை சமூக ஊடகங்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவைகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

ப: முதலில் செல்வி உதய சீலன் கில்மிஷா, பாடும் தன் திறமையை வெளிப்படுத்திச் சரிகமப நிகழ்வில் சீசன் மூன்றில் முதலிடத்தைப் பெற்றதோடு மிகச் சிறப்பாக அந்நிகழ்வில் பங்கெடுத்துப் பலரது பாராட்டுக்களையும் சர்வதேச ரீதியில் பெற்றிருக்கின்றார். உண்மையில் எமது பிள்ளை கில்மிஷா மிகுந்த பாராட்டுக்குரியவர். நிற்க, அவள் மிகச் சிறிய பிள்ளை. வாழ்க்கைப் பயணத்தில் அவள் இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டியவள். ஆகவே, அவள்குறித்த மிதம்மிஞ்சிய விமர்சனங்களையும் கருத்துக்களையும் தவிர்ப்பதோடு அவள் வளர்வதற்கான காலத்தையும் இடத்தையும் சூழலையும் வழங்குவது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையென நினைக்கின்றேன். அவளுடைய வளர்ச்சிக்கும் இவள் போன்ற பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் எதுவும் தடையாக இருந்துவிடாமல் பார்த்துக்கொள்வது அனைவரினதும் கடனாகும். செல்வி கில்மிஷா, இன்னுமின்னும் இசை உலகில் வளரவேண்டும், உயரவேண்டும், சாதனை படைக்கவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

*(அகில், மன்னார்)*

**கேள்வி: 'என் கேள்விக்கென்ன பதில்' என்ற இப்பகுதி நூலுருப் பெற்றால் இன்னும் பலருக்குப் பயன்படும். வாசித்து யோசித்து வளரக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்! நூலாக்க எண்ணம் உண்டா?**

ப: அகில், உங்கள் எண்ணம் நல்லெண்ணம்! ஆனால், அச்சேற்ற நல்லெண்ணம் மட்டும் போதாதே! காசும் தேவையல்லவா!

*(அன்ரனி, கொழும்பு)*

**கேள்வி: இன்று, தங்கள் வேலைகளை, பணிகளைச் செய்வதில் காட்டுகின்ற ஆர்வத்தை, அக்கறையைப் பார்க்கிலும் பொருள் சேர்ப்பதிலும், காசு உழைப்பதிலும்தான் இன்று பலர் மிகுந்த அக்கறை காட்டுகின்றார்கள். அதிலும் சிலர், தங்களின் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்காகவே ஓயாமல் ஓடியோடி உழைக்கின்றார்கள்! இவைபற்றி?**

ப: உழைப்பது நல்லதுதானே. உழைப்பது நமது அடிப்படை அழைப்பு! "உழைக்காதவன் உண்ணலாகாது" என்கின்றது புனித பவுலின் இறைவார்த்தை! ஆனால், தங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் செய்வதும், தாம் பெறுகின்ற ஊதியத்திற்குத் தங்கள் கடமைகளை ஆற்றுவதும் அறக்கடனாகும்! அதேவேளை, "உன் பிள்ளை ஊனமாய்ப் பிறந்தால் மட்டுமே சொத்துச் சேர்த்துவை. இல்லையென்றால் சொத்துச் சேர்த்துவைத்துப் பிள்ளையை ஊனமாக்காதே!" என்பார் காமராஜர். இதுவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்து!


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.02.1931 | 10.01.2024 |



**திருமதி லூர்ட்ஸ் மேரி இம்மானுவல் (மலர்)**

திருமதி லூர்ட்ஸ் மேரி இம்மானுவல் 10.01.2024 லண்டனில் காலமானார் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

இவர் காலஞ்சென்ற P.J இம்மானுவலின் மனைவியும் Dr. ஹரிசீன்றன் PHD, ஹரிந்திரா ஆகியோரின் தாயாரும் மைனி மற்றும் ஜெயராஜசிங்கம் ஆகியோரின் மாமியும் மேரி பிரானின் அம்மம்மாவும் காலஞ் சென்றவர்களான பற்றிக், ஜோசப்பின், PC அன்ரனி, செபஸ்ரியன், வெளிசிற்றா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

தகவல்
ஜெரோம் ரெட்ணராஜா (சமாதான நீதிவான்)

அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்

AD-03


## 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் 50 ஆவது ஆண்டு நினைவு நாள்

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற 4ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டின் 50ஆவது ஆண்டு நினைவு நாள் கடந்த 07 ஆம் திகதி குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கலையரங்கில் நடைபெற்றது.

குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் தலைமையில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் குருநகர் சிறுவர் பூங்காவில் 4வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் நினைவாக நிறுவப்பட்டு, தமிழ்த்தூது தனிநாயகம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டுக் கலையரங்கில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாண தமிழ்தூது தனிநாயகம் அடிகளார் ஆய்வு மன்ற இணைப்பாளர் அருட்கலாநிதி ஜெயசேகரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சிறப்பு நிகழ்வாக குருநகர் இளைஞர் கலைக் கழகத்தினரால் 'கும்பகர்ணன்' தென்மோடிக்கூத்தும் மேடையேற்றப்பட்டது.

உலக நாடுகளில் பணியாற்றும் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தி, தமிழ்மொழியை வளப்படுத்த முன்னெடுக்கப்படும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு முதன் முதலில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் முயற்சியால் 1966ஆம் ஆண்டு மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்றது.

1974ம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி இம்மாநாட்டில் கலந்து கொண்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 27.06.1939 | 30.01.2019 |



அமரர்
**திருமதி அன்ரனெற் றோஸ்மலர் வேதநாயகம் (மணி)**

நான் நல்லதொரு
போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்.
விசுவாசத்தைக் காத்துக்
கொண்டேன்.

(2 திமோத்தேயு 4:7)

7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

AD/01

## விண்ணக வாழ்வின் 5ம் ஆண்டு நிறைவு

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26.11.1973 | 14.01.2019 |



அமரர் **நீக்கிலாப்பிள்ளை சறோசா**

(மறையாசிரியர், புனித பேதுருவானவர் ஆலயம், மண்டைதீவு)
(ஆசிரியர், யா/மத்திய கல்லூரி)

ஆண்டுகள் ஐந்து பஞ்சாய் பறந்தாலும்
உன் நினைவுகளின் நிழல்கள் தொடருதம்மா
உன் அன்பு மொழி கேட்க ஏங்குகின்றோம்
உன் கடின உழைப்பும் கல்லறையில் கருகினதோ
உன் பக்தி பரமனையும் பணித்ததுவோ
உன்னைப் பாரில் நின்று அழைக்க
உன்னைக் காணாது ஏங்குகின்றோம்! கலங்குகின்றோம்!

இவரது பிரிவால் துயருறும்
சகோதரங்கள், உறவினர்கள்

AD/02


## சவால்மிக்க காலங்களில் ...

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 2024 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன் விழா ஆண்டாகவும் அமைவதனால் அப்பொன்விழாவின் நினைவு நிகழ்வுகளில் ஒன்றாக அமையவிருப்பது இதன் சிறப்பை இரட்டிப் பாக்குகின்றது.

மேலும் 'கிறிஸ்தவக் கற்கைகளில் முதலாவது அனைத்துலக ஆய்வு மாநாடு' யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையால், யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையோடு 2018ம் ஆண்டு மார்கழி மாதம் 07ம், 08ம் திகதிகளில் நடாத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# திருமலையில் புனிதர்களின் புனிதப்பண்டங்கள்



திருகோணமலை மறைமாவட்டம் புனித குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த பணி மனையின் பாதுகாப்புப் பெட்டகம் கடந்த 03ஆம் திகதி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் திறக்கப்பட்டது.

பங்கு மக்களின் உதவியோடு வெட்டித் திறக்கப்பட்ட இப்பெட்டகத்தில் 9 புனிதர்களின் புனிதப்பண்டங்கள் அடங்கிய பேழைகளும், செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார் ஆலயத்துக்குச் சொந்தமான தங்கச்சங்கிலியும் கிடைக்கப் பெற்றுள்ளதெனப் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயரட்ணம் அடிகள் தெரிவித்துள்ளார்.

இத்திருத்தலம் இயேசு சபைக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவர்களின் பாரம்பரியத்தின்படி 1977ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பெட்டகம் அமைக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் பங்குத்தந்தை அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

# மல்லாவிப் பங்கிற்குப் புதிய பங்குத்தந்தை



மல்லாவிப் பங்கின் புதிய பங்குத்தந்தையாக அருட்தந்தை நியூமன் அடிகள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நியமனம் பெற்றுத் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வு கடந்த 07ஆம் திகதி மல்லாவி புனித செபஸ்தியார் ஆலயத்தில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

# மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுக் கூட்டம்



யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுக் கூட்டம் கடந்த 08ஆம் திகதி நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலயத்தில் நடைபெற்றது.

ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை றொகான் டோமினிக் அடிகள் கலந்து சிறப்புரை ஆற்றியதுடன் வருகின்ற 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய அன்பிய ஆணைக்குழு ஒன்றுகூடல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தில் மறைக்கோட்ட அன்பிய இணைப்பாளர்கள் மற்றும் ஆணைக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# புனித வின்சென் டி போல் மத்திய சபையினருக்கு யாழ் ஆயர் ஆசீர்



யாழ். மறைமாவட்ட புனித வின்சென்டிப்போல் மத்திய சபை உறுப்பினர்கள் கடந்த 06ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து இவ்வாண்டில் பிறரன்புப் பணிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆசீரைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நேசநாயகம் அடிகளின் தலைமையில் யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் புனித வின்சென் டி போல் சபையின் புலமைப் பரிசில் திட்டத்தினூடாக க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

தொடர்ந்து அங்கத்தவர்களுக்கான புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு யாழ். மறைக்கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

# இளவாலை யூதாததேயு ஆலய இளையோரின் விளையாட்டுப்போட்டி



இளவாலை புனித யூதாததேயு ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட 2024ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த 07ஆம் திகதி ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அடிகளின் வழிநடத்தலில் ஒன்றியத் தலைவர் செல்வன் றோய் அலைக்சின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு சிறுவர்கள், இளையோர், அன்னையர் மற்றும் தந்தையர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை பிறாயன் அடிகள் பிரதம விருந்தினராகவும், சில்லாலை றோ.க.த.க. பாடசாலை ஓய்வுநிலை அதிபர் திருமதி மரியகொறற்றி பியன்வெனு அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் சண்டிலிப்பாய் பிரதேச இளையோர் சேவை உத்தியோகத்தர் திரு. அகிலராஜ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டார்கள்.

# வின்சன் பற்றிக் அடிகளாரின் இரு நூல்கள் வெளியீடு



அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளின் “அன்பின் உட்குரல்” மற்றும் “உறவின் இராகங்கள்” ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி யாழ். பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்பநல நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நூல்களை வெளியிட்டு வைக்க முதல் பிரதிகளை நாவாந்துறை அன்னை கடல் உணவு வாணிப உரிமையாளர் திரு. அமலதாஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

ஹென்றி ஜே. எம். நொவென் அவர்களின் The inner voice of love எனும் ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயரப்பாக “அன்பின் உட்குரல்” நூலும் உறவின் இராகங்கள் நூல் அருட்தந்தையினால் ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட நூலின் மூன்றாவது பதிப்பாகவும் அமைந்துள்ளது.

## தும்பளை புனித தூர்து அன்னை திருத்தலப் பெருவிழா

**02.02.2024 – 11.02.2024**

02.02.2024 - நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி

10.02.2024 - நற்கருணை தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி

யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர்

அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில்



11.02.2024 (ஞாயிறு) - திருத்தலப் பெருவிழா

முதல் திருப்பலி - காலை 5.30 மணி

திருநாள் திருப்பலி - காலை 7.00 மணி

யாழ்.மறைமாவட்ட ஆயர்

பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை

தலைமையில் நடைபெறும்

திருத்தலப் பரிபாலகர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.